கூட்ட எண் 06 நகராட்சி அலுவலகம்,
2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 31.08.2020

2020-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31.08.2020-ந்தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள தெருக்களில் கழிவுநீர் கால்வாய் உட்புறம் பல தெருக்களில் வண்டல் மண் நிரம்பி கழிவுநீர் வெளியே வருவதால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளது. இதனால் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, நகரில் உள்ள கால்வாய் அடைப்புகளை எடுத்து தர தனியார் மூலம் JCB இயந்திரம் மற்றும் டிராக்டரில் வண்டல் மண் எடுக்க தோராய மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் செலவு ஆகும். இனி வரும் காலங்கள் மழைக்காலம் தொடங்க இருப்பதால், இப்பணி அவசியம் கருதி வேலைகள் செய்ய இந் நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

4. ஆரணி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டி சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் கடந்து உள்ளது. இந்த பேருந்து நிலையத்தில் உள்ள தூண்கள் பழுதடைந்து உள்ளது. இந்த இடத்தில் உள்ள தூண்களை பழுது சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். இப்பணி அவசியம் கருதி, நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

5.ஆரணி நகராட்சியில் 5 MCC உள்ளது. அங்கு உள்ள இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளது. இயந்திரத்தை பழுது சரி செய்யவும், விளம்பர பலகை வைக்கவும் ஒப்பந்தாரர் மூலம் வேலையை செய்த உடன் தொகையை ஏற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீடு ரூ.1.25 இலட்சம் செலவினத்தை நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

6. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்த அ.சேதுராமன் என்பவர் 17.06.2020-ல் பணியில் காலமாகிவிட்டார்.எனவே, அன்னார் SPF கணக்கை முடித்து அவருடைய மனைவி M தேவி பெயரில் கீழ்கண்டவாறு தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அசல் - ரூ.5880/-
வட்டி - ரூ.1961/-
--------------
மொத்தம் ரூ.7841/-
---------------

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் : 1034/2020/பி2)

7. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2020ல் ஓய்வு பெற்ற திருமதி.R.மண்ணுஅம்மாள்/ராமசாமி என்பவர் SPF கணக்கை முடித்து கீழ்கண்டவாறு தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு ஒப்புதலுக்கும் வைக்கபடுகிறது.

அசல் - ரூ.2,960/-
வட்டி - ரூ.8,581/-
நி.ப. தொகை - ரூ.10,000/-
--------------
மொத்தம் ரூ.21,541/-
---------------

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் : 960/2020/பி2)

8. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு நோய் தடுப்பு பணிக்காக தேவையான கிருமிநாசினிகள் அவசர அவசியம் கருதி Sec 15ன்படி தி. திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் Co-Operative Society திருப்பத்தூர் என்ற நிறுவனத்தில் இருந்து வாங்கிக்கொள்ளவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 50000/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தி. திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் Co-Op Centre திருப்பத்தூர் சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.3.மேற்படி செலவினம் Sec15படி மேற்கொள்ளலாம்.
கோப்பு எண். 483/2020/எச்1

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ. எண் | பாதுகாப்பு உபகரணங்கள் (ம) கிருமிநாசினி பொருட்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1. | சோடியம் ஹைப்போகுளோரைடு கரைசல் | 2000 லிட்டர் |
| 2. | லைசால் | 2000 லிட்டர் |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.கோப்பு எண். 483/2020/எச்1

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ. எண் | பாதுகாப்பு உபகரணங்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1. | முழு உடற்பாதுகாப்பு உடை | 1500 எண்ணிக்கை |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 11.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். கோப்பு எண். 483/2020/எச்1

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ. எண் | பாதுகாப்பு உபகரணங்கள் (ம) கிருமிநாசினி பொருட்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1. | பிளிச்சிங் பவுடர் | 3000 கிலோ |
| 2. | நீர்த்தசுண்ணாம்பு நீர் | 5000 கிலோ |
| 3. | கையுறை(ஒருமுறை மட்டுமே பயன்படும்) | 5000 எண்ணிக்கை |
| 4. | மூன்று அடுக்கு முகக்கவசம் | 5000 எண்ணிக்கை |
| 5. | Hand Sanitizer | 500 லிட்டர் |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.: 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். கோப்பு எண். 483/2020/எச்1

12. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கார்த்திகேயன் ரோடு, பழைய மற்றும் புதிய பேருந்து நிலையம் VAK நகர், பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய்களை JCB இயந்திரம் மூலம் தூர்வாரிய வகையில் வாடகை தொகை ரூ. 76000/- மட்டும் ஆரணி ஸ்ரீ ஜானகி எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**<u>1.</u>மன்றம் அனுமதிக்கலாம்.2.மேற்படி செலவினத் தொகையை வருவாய் நிதியில் இருந்து வழங்க அனுமதிக்கலாம். **கோப்பு எண். 819/2020/இ**1

13. இந்நகராட்சி பொது சுகாதரப்பிரிவில் தூய்மை பணியாளராக பணி புரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2020-ல் ஓய்வு பெற்ற P.காணிக்கராஜ் என்பவரின் சிறப்பு சேம நலநிதி கணக்கை முடித்து கீழ்கண்ட விவரப்படி தொகை வழங்க மண்டர்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அசல் | :2960 |
| வட்டி | :20632 |
| நி.ப.தொகை | :10000 |
| | :33.592 |

கோப்பு எண்.902/2020/பி2

அலுவலக குறிப்பு:-மேற்படி தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

14. ஆரணி நகராட்சி பொது சுகாதரப்பிரிவு நகரில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டு அறிந்து கொள்ளுதல் என்ற மல்டி கலர் நோட்டீஸ் அச்சடித்து பொதுமக்களுக்கு வீடுகள் தோறும் வழங்க விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விளைபுள்ளிகள் மற்றும் தோராய செலவினம் ரூ.65000/-க்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | GST உட்பட-ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | சுபம் பிரிண்டர்ஸ்,39/7,கொசமாடத் தெரு,திருவண்ணாமலை | ரூ.3.25 |
| 2 | ஜனனி பிரிண்டர்ஸ்,39/1,சென்னப்பன் தெரு, திருவண்ணாமலை | ரூ.3.55 |
| 3 | அண்ணாமலையார் ஆப்செட் பிரிண்டர்ஸ்,987-A II nd Street,தென்றல் நகர், வேங்கிகால்,திருவண்ணாமலை | ரூ.3.60 |

கோப்பு எண்.483/2020/எச்-1

அலுவலக குறிப்பு:-1. மன்றம் அனுமதிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி நோய் தடுப்பு பணி அவசியம் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்த சுபம் பிரிண்டர்ஸ் அச்சகத்தில் அச்சடித்தமைக்கும் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

15. இந்நகராட்சி பொது சுகாதரப்பிரிவில் இயங்கி வரும் மூன்று எண்ணிக்கை வாகனங்களுக்கு 06.09.2020,26.09.2020 (ம) 27.09.2020ந் தேதியுடன் இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஓராண்டிற்கு புதுப்பித்துக் கொள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு தொகை செலுத்த தோராய செலவின தொகை ரூ.83302/-மட்டும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

1. TN 25 AX 6476 - 32852/-
2. TN 25 AX 6476 - 32852/-
3. TN 25 AX 6476 - 32852/-

------------

ஆக மொத்தம் = 83302/-

---------

அலுவலக குறிப்பு:-1. மன்றம் அனுமதிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

16. இந்நகராட்சிக்கு சொந்தமான காஜிவாடை மாடு அடிக்கும் தொட்டியினை 2020-21ம் ஆண்டிற்கு புதுப்பிக்க தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு F.TVM 0275/R3/DEE/TNPCB/TVM/2020 நாள்: 25.08.2020ன் கடிதத்தின் படி தொகை ரூ.8800/- மட்டும் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-1. மன்றம் அனுமதிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

17. உயர்திரு மாவட்ட ஆட்சியர்,திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்: ஆ4/7791/2020, நாள் : 16.03.2020 கடிதத்தில்,ஆரணி வட்டம் மற்றும் நகர எல்லைக்குட்பட்ட அரசு புறம்போக்கு (பூந்தோட்டம்) வார்டு F ,பிளாக் 1, நகரளவு எண் 17/1-ல் 4000 சதுர மீட்டரில்,405 சதுர மீட்டர் பரப்பில் ஆக்கரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வரும் 8 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கிட கிராமிய நத்தமாக வகை மாற்றம் செய்திட ஆரணி நகராட்சியின் மன்ற தீர்மானம் இயற்றி தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஆரணி நகர சார் ஆய்வாளரின் 17.08.2020ந் தேதிய குறிப்பில் ஆரணி நகரம் சர்வே வார்டு F, பிளாக் 1, நகரளவு எண் 17/1ல் 405 சதுர மீட்டர் இடமானது நகராட்சி பூந்தோட்டம் மற்றும் காலி நத்தம் என உள்ளது.மேற்படி இடத்தை கிராமிய நத்தமாக வகை மாற்றம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-1. மன்றம் முடிவு செய்யலாம். (கோப்பு எண் : 557/2020/எப்1)

18. ஆரணி நகராட்சியின் பொது சுகாதரப்பிரிவில் பயனற்ற உடைந்த டம்பர் பின்கள் 24 எண்ணிக்கையும் டம்பர் பிளேசர் மூடி 17 எண்ணிக்கையும் துருபிடித்து பயன் படுத்த முடியாத நிலையில் இருப்பதாக பொது சுகாதரப்பிரிவின் சுகாதார ஆய்வர் குறிப்பு வழங்கியுள்ளதின்  பேரில் மேற்படி பொருட்களை பொது ஏலத்தில் விட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

கோப்பு எண் : 771/இ1/2019

அலுவலக குறிப்பு:-மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.